# ஆண்டின் பொதுக்காலம் 21 ஆம் வார ஞாயிறு
# திருவழிப்பாட்டு ஆண்டு C (25-08-2013)

## திருப்பலி முன்னுரை:

தந்தையாம் இறைவனின் அன்புமக்களாகிய உங்கள் அனைவருக்கும் ஆண்டின் பொதுக்காலம் 21 ஆம் வார ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் இவ்வேளையில் வாழ்த்துக்கூறி இந்நாளில் உங்களுக்கு இறையாசீர் பெருக வேண்டுகிறேன்.

“மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா?“ சில வேளைகளில் மனிதர் எழுப்புகின்ற கேள்விகள் அர்த்தமற்றவையாகத் தோன்றலாம். ஆனால், ஆழ்ந்து சிந்திக்கும்போது அங்கே புதைந்துகிடக்கின்ற அர்த்தத்தை நாம் காண முடியும். “மீட்புப்பெறுவோர் சிலர் மட்டும் தானா?“ என்னும் கேள்வி இவ்வகையைச் சார்ந்தது எனலாம். இயேசு இறையாட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்துக்கொண்டே எருசலேமை நோக்கிச் செல்கிறார். அங்குதான் அவர் சிலுவையில் அறையுண்டு மனித இனத்தின் மீட்புக்காகத் தம்மையே பலியாக்குவார். பயணம் செல்கின்ற இயேசுவை அணுகுகிறார் ஒருவர். மீட்புப் பெறுவோர் சிலரா பலரா என்பதை அவர் அறிய விரும்புகிறார். இயேசு அவருக்கு நேரடியான பதில் வழங்கவில்லை. ஆனால், இறையாட்சியில் நுழைவதற்கான வாயில் “இடுக்கமானது“ என இயேசு குறிப்பிடுகிறார். அதே நேரத்தில், இயேசுவோடு பழகி, அவரோடு விருந்து அருந்தி உறவுகொண்டாடியதைக் காட்டி விண்ணரசில் நுழைந்துவிடலாம் என நினைத்தால் அது தவறு எனவும் இயேசு சொல்கிறார். என்றாலும், கடவுளின் ஆட்சியில் அனைத்து மனிதரும் இடம் பெற வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம் என்பதில் ஐயமில்லை.

தாங்களே கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் என்னும் இறுமாப்பில் தங்களுக்கு எப்படியும் கடவுளின் ஆட்சியில் பங்கு உண்டு எனவும், தாங்கள் மீட்புப் பெறுவது உறுதி எனவும் மக்கள் நினைத்தலாகாது என்பதை இயேசு உணர்த்துகிறார். கடவுளின் ஆட்சி எல்லா மனிதருக்கும் உரித்தானது. எனவே, மீட்புப் பெறுவோர் உலகின் நான்கு திசைகளிலிருந்தும் வருவர் இறையாட்சியில் பங்கேற்பர். இவ்வாறு கடவுளின் மீட்பில் பங்கேற்போர் சிலரல்ல, பலரே என நாம் கூறலாம். என்றாலும், இயேசுவின் அழைப்பை ஏற்று, “இடுக்கமான“ வாயில் வழியாக நுழைய வேண்டும் என்னும் போதனையை நாம் மறந்துவிடல் ஆகாது. மீட்பு என்பது நாம் கேட்டுப் பெறுகின்ற ஓர் உரிமை அல்ல, மாறாகக் கடவுள் தாமாகவே விரும்பி நமக்கு அளிக்கின்ற ஒரு கொடை. எனவே, மீட்பு என்னும் கொடைக்காக நாம் எந்நாளும் கடவுளுக்கு நன்றி செலுத்துவதே முறை. ஆகவே நாம் அனைவரும் ஆண்டவர் காட்டும் நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றி, நாமே அனைவருக்கும் நற்செய்தியாக மாறி இறைவனைப் புகழ்ந்தேற்றும் வரம் கேட்டுச் செபிப்போம்.

## அல்லது

தந்தையாம் இறைவனின் அன்புமக்களாகிய உங்கள் அனைவருக்கும் ஆண்டின் பொதுக்காலம் 21 ஆம் வார ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் இவ்வேளையில் வாழ்த்துக்கூறி இந்நாளில் உங்களுக்கு இறையாசீர் பெருக வேண்டுகிறேன்.

உன்னதமான வாழ்வை நமக்குத் தரும் இறைவன், நம்மில் பெரும் அக்கறையுடையவராக இருக்கின்றார். வழியும் உண்மையும் வாழ்வுமான இயேசுவை நம்மத்தியில் அனுப்பி, நாம் அவரிடம் செல்லும் வழியைக் காட்டுகின்றார். நம்மைக் கண்டித்துத் திருத்தி ஆறுதல், நிறைவு, அனைத்தையும் பெருக்கெடுத்த நீரோடை போல நிறைவாக அவரே அருளுகின்றார். தந்தைக்குரிய பாசத்தையும், பரிவையும் எப்பொழுதும் காட்டி வருகின்றார். ஆகவே நாம் அனைவரும் ஆண்டவர் காட்டும் நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றி, நாமே அனைவருக்கும் நற்செய்தியாக மாறி இறைவனைப் புகழ்ந்தேற்றும் வரம் கேட்டுச் செபிப்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**“நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஒற்றுமையின் வேந்தனே இறைவா,**

உம்மைப் போற்றுகிறோம். ஒரே ஆயனும், ஒரே மந்தையுமாக நாங்கள் அனைவரும் வாழும் வரம் தாரும். எங்களிடையே சாதி, மதம், மொழி, நாட்டின் பெயரால் அமைந்துள்ள வேலிகளை, தடைகளைத தகர்த்தெறிந்து, அனைவரும் உமது பிள்ளைகள் என்னும் உம் கனவை நனவாக்கும் பணியில் எங்களை ஈடுபடுத்த எங்களை ஆசிர்வதித்தருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இப் மண்ணிலே புலம்பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும், உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் மாறாத பேரன்பு உடையவரான தந்தையே!**

உலகிலிருந்து தவறுகள் அகலவும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும் வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வளிகும் வார்த்தைகளைக் கொண்டுள்ள தந்தையே!**

எங்களுக்கு மீட்பு என்னும் கொடையை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் தந்தையே!**

பலியிலே பங்கேற்கும் நாங்கள் உம்மை ஏற்று பயணிப்பதால் வரும் இடர்பாடுகளை ஏற்று துணிவுடன் சந்திக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.